# প্রার্থনা ও উপাসনা



# நமது வேதாகமம்

எல், ஜெட்டர் வாக்கர்

**INTERNATIONAL CORRESPONDENCE INSTITUTE**
P.O. Box 1073, Jalan Semangat, 46870 Petaling Jaya, Selangor
Tel: 03-7550541

# பொருளடக்கம்

பாடம்

முதலாவது நாம் சற்று உரையாடுவோம் *1*

1. வேத பாடத்தின் நன்மைகள் *6*

2. தேவன் நமக்கு அளித்த புத்தகம் *18*

3. வேதாகமத்தில் நீங்கள் விரும்புவதை எவ்வாறு கண்டுபிடிப்பது? *33*

4. பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் *43*

5. புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் *64*

6. வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான் என்று எப்படித் தெரியும் *80*

இறுதி விஞைத்தாள் *98*

© 1983 All Rights Reserved
International Correspondence Institute
Brussels, Belgium.
D/1983/2145/23

**INTERNATIONAL CORRESPONDENCE INSTITUTE**
P.O. Box 1073, Jalan Semangat, 46870 Petaling Jaya, Selangor.
Tel: 03-7550541

*(மாணவர் பதிவுக்குறிப்பு)*

பெயர் (திரு/ திருமதி/ குமாரி) ..................................

......................................வயது...........

முகவரி/ விலாசம் ..................................................

..........................................................................

தொழில்/ வேலை........................மதம்...........

பள்ளிப் படிப்பு விவரம் ..........................................

தபால் கல்வி அல்லது வீட்டுக்கல்வி பற்றி விவரம்..........

தேவாலயம் பற்றி விவகாரம் ......................................

மேலே கேட்கப்பட்டுள்ள யாவற்றிற்கும் தங்களால் ஆன தகுந்த பதிலை அளித்து கூடிய விரைவில் எங்களுக்கு அனுப்புவீர்களாக.

நன்றி.

கையொப்பம் ..........................................................

உங்களிடம் பரிசுத்த வேதாகமம் இருக்கிறதா ..............

புதிய ஏற்பாடு ............., அருட்செய்தி நூல்.........

(ஆம்/ இல்லை என்று பதில் அளிக்கவும்.)

# முதலாவது நாம் சற்று உரையாடுவோம்

## உமது பாட புத்தகத்தினை இயற்றினவரிடமிருந்து ஒரு சில வார்த்தைகள்

வேதாகமம் உங்களுக்கு எவ்வாறு உதவி செய்யும் என்று எப்போதாகிலும் நினைத்தது உண்டா? தேவனுடைய வார்த்தையாகிய அது உண்மையாகவே மனுகுலத்திற்கு தேவனுடைய செய்தியாக இருக்கிறதா? ஏன், எப்படி வேதாகமம் எழுதப்பட்டது? ஒரு வேளை இந்த கேள்விகளும் இதற்கு அதிகமான கேள்விகளும் உங்கள் மனதில் எழும்பியிருக்கலாம். அப்படியென்றால் இந்த புத்தகம் உங்களுக்கென்றே எழுதப்பட்டிருக்கிறது.

அநேக வருடங்களுக்கு முன்பு இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீது தேவனை குறித்த தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தினான். அவன் சொன்னதாவது ''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமாயும் இருக்கிறது'' (சங்கீதம் 119: 105) நீர் யாராயிருந்தாலும், எவ்விடத்திலிருந்தாலும், எந்த பிரச்னைக்குள் அகப்பட்டிருந்தாலும், எந்த ஒரு தீர்மானத்தை எடுப்பது என்ற இக்கட்டான நிலையில் இருந்தாலும் தாவீது இராஜாவுக்கு இருந்த அதே நம்பிக்கை உமக்கும் இருக்கலாம்.

இந்த பாடத்திட்டம், வேதாகமம் எப்படி எழுதப்பட்டது என்பதை விளக்குவதற்கு உதவுவதோடு உம்முடைய அனுதின வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கூட இப்பாடத் திட்டம் இருப்பதால் நீர் அதில் சார்ந்திருக்கலாம். ஒரு புது முறை கற்பித்தலைக் கைக் கொண்டுள்ளதால், இவைகளை எளிதில் படிக்கவும், உடனே அனுபவத்தில் கொண்டுவரவும், அதிகமாய் உதவும்.

## உம்முடைய நோக்கங்கள் என்ன?

உமது பாட பயிற்சியில் மிகவும் நல்லலவைகளை கற்றுக்கொள்ள சில நோக்கங்கள் முன்நிறுத்தி அவைகளை எப்படியாகிலும் அடைந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். கீழ்க்கண்ட நோக்கங்களை ஏன் உமது நோக்கமாக்கக் கூடாது.

* வேதாகமத்தை எவ்வாறு உபயோகிப்பது என்பதை கற்றுக்கொள்ள
* வேதாகமம் தங்களுக்கு தேவனுடைய செய்திகள் என விசுவாசிகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணத்தை விளங்கிக் கொள்ள
* தினமும் உமது வேதாகமத்தை வாசிக்க
* விசுவாசத்திற்கும் நல் நடக்கைக்கும் வேதாகமத்தை வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ள.

## படிப்பிற்கு வழிகாட்டி

நமது வேதாகமம் என்னும் பாட புத்தகமானது மிக சிறிதாக அமைக்கப்பட்டுள்ளதால், உங்களோடு கூட எடுத்துச்சென்று கிடைக்கும் குறுகிய நேரத்தில் கூடபடிக்கலாம். ஒவ்வொரு நாளும் இப்புத்தகத்தை படிப்பதற்கென்றுசிறிது நேரத்தை ஒதுக்குங்கள்.

எந்த ஒரு பாடத்தின் ஆரம்பத்திலும் பாடத்தின் கருத்து என்று கொடுக்கப்படும். கருத்து பாடத்தின் முழுமையையும் விளங்கிக்கொள்ள உதவுகிறது. பாடக் கருத்து ஒரு இலக்கு அல்லது ஒரு நோக்கத்தைக் கொண்டதாகும். இந்தக்கருத்தை மனதில் கொண்டிருந்தால் படிப்பதற்கு அதிகமாக உதவி செய்யும்.

பாடத்தின் முதல் இரண்டு பக்கங்களையும் மிகவும் கவனமாகப் படியுங்கள். அதனால் தொடர்ந்து படிக்க உங்கள் மனதை ஆயத்தமாக்கும். பிறகு பாடத்தை பகுதி பகுதியாகப் பிரித்து நீங்கள் செய்ய வேண்டியது என்பதின் கீழ் எழுதியிருக்கிற அறிவுரைகளை படியுங்கள். பாடபுத்தகத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில்

எழுத போதுமான இடம் இல்லை என்றால் ஒரு நோட்டு புத்தகத்தில் எழுதிவையுங்கள், அப்படியென்றால் பாடத்தை திருப்பி பார்க்கும்போது உதவி செய்யும். குழுவாக சேர்ந்து இப்பாடத்தை படிக்கிறீர்கள் என்றால் குழு தலைவனின் அறிவுரைகளை பின்பற்றுங்கள்.

## எப்படி கேள்விகளுக்கு பதில் அளிப்பது

இப்பாட புத்தகத்தில் வித்தியாசமான கேள்விகளை பார்க்கலாம். சில மாதிரி கேள்வி விடைகளை கீழ் காணலாம்.

ஒன்றுக்கதிகமான விடைகளிலிருந்து சரியான விடை தெரிந்தெடுக்கும் முறை

மாதிரி 1. வேதாகமத்தில் அடங்கிய மொத்த புத்தகங்கள்

... a) 100
... b) 66
... c) 27

சரியான விடை b) 66 புத்தகங்கள் பாடபுத்தகத்தில் √ அடையாளம் போடவும்

1. வேதாகமத்தில் அடங்கிய புத்தகங்கள்

... a) 100
...√b) 66
... c) 27

(சில விடைகள் ஒன்றுக்கு அதிகம் சரியாக இருந்தால் √ என்ற அடையாளத்தை சரியான எல்லா விடைகளுக்கு முன் இடுங்கள்)

சரியா, தவறு என்று கேட்கிற கேள்விகள் அல்லது கொடுக்கப்பட்டிருக்கிறவைகளில் எவை சரியான விடை என்று கண்டுபிடித்து அதற்கு முன்..√ ...அடை-யாளத்தை போடவும்.

மாதிரி 2. கீழ் கொடுக்கப்பட்டவைகளில் சரியான வாக்குமூலம் எவை?

... a) வேதாகமத்தில் மொத்தம் 120 புத்தகங்கள்
√b) வேதாகமம் இன்றைய விசுவாசிகளுக்கு தேவனுடைய செய்தியாக இருக்கிறது

... c) எல்லா வேதாகம எழுத்தாளர்களும் எபிரேய மொழியில் எழுதினார்கள்

√d) வேதாகம எழுத்தாளர்கள் எல்லாம் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள்.

b யும் d யும் சரியான விடைகள். மேற்கண்டவாறு √ என்ற அடையாளத்தை சரியான விடைகளின் முன் போடவும்.

இணைத்தெழுதுக மாதிரி கேள்வி

மாதிரி 3. கீழ்க்காணும் தலைவர்கள் செய்த காரியத்தை கண்டுபிடித்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணை பொருந்தும் வார்த்தைகளுக்கு முன் போடவும்.

...a சீனாய் மலையில் பிரமாணம் பெற்றுக் கொண்டான் 　　1 மோசே

...b இஸ்ரவேல் ஜனங்களை யோர்தான் கடக்க செய்தான்

...c எரிகோவை சுற்றினான் 　　2 யோசுவா

...d பார்வோனின் அரண்மனையில் தங்கினான்

a யும் d யும் மோசேயோடு சேர்ந்தது. b யும் c யும் யோசுவாவோடு சேர்ந்தது. a க்கும் d க்கும் பக்கத்தில் 1 என்ற எண்ணையும் b க்கும் பக்கத்தில் 2 என்ற எண்ணையும் போடவும்.

மாணவர் பதிவேடு

நற்சான்றிதழ் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு இப்பாடத்தை படிக்கிறீர் என்றால் இப்புத்தகத்தோடு வினாத்தாள் ஒன்று பெற்றிருப்பீர்.

உமது அருகாமையில் இருக்கும் ICI அலுவலகத்திற்கு கேள்வித்தாளை அனுப்ப கொடுத்திருக்கும் முறைகளை கவனியுங்கள். உமது பாடபுத்தகத்தின் இரண்டாம் பக்கத்திலோ பின் பக்கத்திலோ விலாசம் அச்சிடப்பட்டிருக்கிறது. உங்கள் விடைகள் திருப்திகரமாக இருந்தால், கவர்ச்சிகரமான நற்சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வீர்கள்.

## எழுத்தாளரைப்பற்றி

லூயிஸ் ஜெட்டர் வாக்கர் என்பவர் உலக மக்களின் ஆவிக்குரிய தேவைகளுக்கென்று தன்னை அற்பணித்தவர். கிறிஸ்தவ பாட நிறுவனத்தில் B.A. யும் M.A. யும் படித்தவர் ஏறக்குறைய 40 வருடங்களாக அவருடைய புத்தகங்கள் ஊழியத்தில் கிரியை செய்து வருகிறது. முதலாவது பெருவிலும், பின் கியூபாவிலும், கடைசியில் மேற்கு இண்டீசிலும் பெல்ஜியமிலும் கிரியை செய்து வருகிறது. அவர் கிறிஸ்தவ பாடநிறுவனத்திற்கென்றும் சுவிசேஷ ஊழியத்திற்கென்றும் 14 புத்தகங்களை எழுதி இருக்கிறார்.

தனிப்பட்ட படிப்பிற்கு இவருடைய புத்தகங்கள் புதுமையாக இருப்பதோடு சர்வதேச I C I அங்கத்தினர்களும் எழுத்தாளரோடு சேர்ந்து உழைத்திருக்கின்றனர். நமது வேதாகமம் என்ற முக்கியமான புத்தகத்தைப் படிக்க இது ஒரு அழைப்பாக இருக்கிறது.

இப்போது முதல் பாடத்தை படிக்க ஆரம்பிக்கிறீர். படிக்கும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.